## ‘அசைன்மெண்ட்’ களால் மாற்றம் நிகழாது

காவிக் கூட்டத்தின் ‘அசைன்மெண்ட்’ களால் தமிழ்நாட்டில் எந்த அசைவையும் ஏற்படுத்த முடியாது என முகநூலில் பதிவிட்டுள்ளார் கல்லூரி மாணவர் அருணை மதன். அவரது பதிவிலிருந்து...

‘நீண்ட நெடிய தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் ஒரு அதிகார மாற்றம், எப்போது நிகழும் என்றால்...

என் புரிதலுக்கு எட்டிய வரையில், அது இரண்டு நிலைகளில் நடைபெறுகிறது. ஒன்று, தத்துவஞானிகளின் கைகளில் அதிகாரத்தைக் கொடுப்பார்கள், அல்லது அரசியல் மேதைமைகள் கைகளில் அதிகாரம் செல்லும். காமராஜர், பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோர் அரசியல் மேதைமைகளாக, தத்துவ மேதைமைகளாக அதிக ஆட்சி அதிகாரம் செய்துள்ளனர். அரசியலில், அந்த வரிசையில் உருவாக்கப்பட்டவர்கள் எம்.ஜி.ஆர் மற்றும் அம்மையார் ஜெயலலிதா ஆகியோர். இன்று, தன்னை முழுமையாய் ஒரு அரசியல் மேதைமையாக வளர்த்தெடுத்துக்கொண்டு, கழகப் பணியாற்றி, அரசியல் பணியாற்றி வருகிறார் தளபதி. அவரை எதிர்த்து, களத்தில் நிற்பதற்கு தத்துவ மேதைகளும் இல்லை, அரசியல் மேதைகளும் இல்லை. ஆகவே. தமிழ்நாட்டில் அரசியல் மேதமையாக ‘வளர முடியாது’ என்று தெரிந்து, சிலர் தத்துவஞானிகளாக வலம் வர துடிக்கின்றனர்.

இதில் அ.மலை முன்வைக்கும் இந்திய தேசியமும், மனநலம் பாதிக்கப்பட்டவர் முன்வைக்கிற ‘தமிழ் தேசியம்’ என்பதும், நடிகர் முன் வைக்கக்கூடிய ’மசாலா பானி பூரி’ தத்துவமும் பார்க்கிற மக்களுக்கு ஒரு புதிய தத்துவங்களாய் தெரியலாம்.

பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் ‘ப்ராஜெக்ட் வொர்க்’ செய்வார்கள், அதுபோல் ஒரு அசைன்மெண்ட் வேலைதான் இவை எல்லாம். ஆகவே, இந்த ‘அசைன்மெண்ட்கள்’ எந்த அசைவையும் தமிழ்நாட்டில் நிகழ்த்த முடியாது.

பெரியாரை இழிவுபடுத்துபவர்களையும், பாசிசமா? பாயாசமா? என்று கேட்பவர்களிடமும் என்ன புரிதலோடு விவாதிக்க முடியும்? ஆகவே ‘லெஸ் டென்ஷன் மோர் வொர்க’ என்கிற வகையில் வாசிப்பு, எழுத்து, பேச்சு –இந்த மூன்று தளங்களிலும் கொள்கையையும் திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களையும் கொண்டு செல்வதையே, முதன்மை நோக்கமாய் காலம் நமக்காய் காத்திருக்கிறது” என எழுதி இருக்கிறார்.

கருத்து பற்றிக் கொண்டால் தீயாகப் பரவும் என்பதற்கு இந்தப் பதிவும் ஒரு சான்று.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவருக்குக் காசுமாலை!



திலீபன் சேகர்

14.09.1975 -அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள், ராணிப்பேட்டை மாவட்டம், ரத்தனகிரியில் அமைந்துள்ள திருமுருகன் திருமண மண்டபம் திறந்து வைக்க வருகை தந்தார். அவ்விழாவில், எனது தந்தை எம்.ஏ. சேகர் அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களுக்குக் காசு மாலை அணிவித்து, மரியாதை செய்தார். உடன் அன்றைய அறநிலையத் துறை அமைச்சர் கண்ணப்பன் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சர் ப.உ.சண்முகம் அவர்களும் பங்கேற்றதைப் பதிவு செய்துள்ள படம் இது.

**– பேராசிரியர் டாக்டர் திலீபன் சேகர், எம்.இ, பி.ஹெச்.டி, மாவட்ட பொறியாளர் அணித் துணை அமைப்பாளர், ராணிப்பேட்டை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணாவும் தமிழும்!

1970 பிப்ரவரி 3-ஆம் தேதி சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில், நடைபெற்ற பேரறிஞர் அண்ணாவின் முதல் நினைவுநாள் நிகழ்ச்சியில், அவருக்கு நினைவு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. ஒன்றிய அமைச்சர் ஜெயில் சிங் வெளியிட, முத்தமிழறிஞர் கலைஞர் பெற்றுக்கொண்டார். ஒன்றிய அரசு மாதிரி அஞ்சல் தலையை கலைஞருக்கு அனுப்பி கருத்து கேட்டபோது, அண்ணாவின் தமிழ்க் கையெழுத்தை அந்தப் படத்துடன் சேர்த்து, அதில் தமிழை இடம் பெறச்செய்தார்.

# கவனம் ஈர்த்த ‘முத்தமிழறிஞர் அரங்கு’



சென்னை 48- வது புத்தகக் காட்சியில் இரண்டாவது ஆண்டாக அரங்கு அமைத்திருந்த, கழக இளைஞர் அணியின் ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’, வாசகர்களின் கவனத்தை ஈர்த்த அரங்கமாக அமைந்திருந்தது.

கடந்த ஆண்டு, நமது முதலமைச்சர் ‘திராவிட மாடல் நாயகர்’ அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’, பாசறைப் பக்கத்தில் வெளியான பல தொடர்களை நூலாக்கம் செய்துள்ளது.

திராவிட இயக்கத்தின் கொள்கை, வரலாறு, கலைஞர் ஆட்சியின் சாதனைகள், திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள், கழகத்தின் களவீரர்களாகத் திகழ்ந்த இரண்டாம் கட்ட ஆளுமைகளைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள், கலை - இலக்கிய தளத்தில் திராவிட இயக்கம் ஆற்றிய பங்களிப்பு ஆகியவற்றை எடுத்துக் கூறும் வகையில், 18 நூல்களை வெளியிட்டுள்ளது.

இந்த நூல்கள் அனைத்தும், திராவிட இயக்கச் சிந்தனையாளர்கள், வாசகர்கள் மட்டுமின்றி, பல்வேறு தரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் உள்ளதாக வாசகர்களும், திராவிட இயக்க ஆய்வாளர்களும் குறிப்பிட்டு வருகின்றனர்.

புத்தகக் காட்சி நடைபெற்ற கடந்த டிசம்பர் 27 ஆம் தேதி முதல் ஜனவரி 12 ஆம் தேதி வரை ஒவ்வொரு நாளும் இளைஞர்கள், கழக இளைஞர் அணியினர், பெரியாரிய செயல்பாட்டாளர்கள், அரசியல் பிரமுகர்கள், எழுத்தாளர்கள் என தினமும் நூற்றுக்கணக்கானோர் முத்தமிழறிஞர் பதிப்பக அரங்கைப் பார்வையிட்டு, நூல்கள் வாங்கிச் சென்றனர்.

குறிப்பாக, தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ஔவை அருள், தமிழ்நாடு அரசின் சிறப்புத்திட்ட செயலாக்கத்துறைச் செயலாளர் தாரேஸ் அகமது, எழுத்தாளர்கள் இமையம், இந்திரன், தமிழ்மகன் உள்ளிட்டோரும், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, பிரபாகர் ராஜா, தி.மு.க இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் ஜோயல், அப்துல் மாலிக் உள்ளிட்ட பலரும் வருகை தந்து நூல்களை வாங்கிச் சென்றனர்.

பதிப்பக அரங்கில், மாலை நேரத்தில் வாசகர்களுடன் உரையாடல் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.ஒவ்வொரு நாளும் ஓர் ஆளுமை வருகை தந்து வாசகர்களோடு உரையாடினர். அந்தவகையில் வே.மதிமாறன், தமிழ் காமராசன், ராஜகம்பீரன் அப்பாஸ், முனைவர் ஜெயரஞ்சன், நாஞ்சில் சம்பத், சுபவீரபாண்டியன், தமிழன் பிரசன்னா, ஜீவசகாப்தன், இந்திரகுமார் தேரடி, திண்டுக்கல் லியோனி, மதிவதனி, விடுதலை இராசேந்திரன், கவிஞர் சல்மா, மருத்துவர் எழிலன், வழக்கறிஞர் அருள்மொழி என ஒவ்வொரு நாளும் ஒருவர் வாசிப்பின் அவசியத்தை எடுத்துரைத்து, வாசகர்களோடு கலந்துரையாடினர்.

திராவிட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவை தொடக்கக் காலங்களில் செய்த அரசியல் பணிகளில், மிக முக்கியமானது எழுத்து - வாசிப்பு - பதிப்புப் பணிகள் என்பதை இளந்தலைமுறைக்கு எடுத்துச் சொல்ல, முத்தமிழறிஞர் பதிப்பக அரங்கு துணை நிற்கிறது, என ஆளுமைகள் பாராட்டிச் சென்றனர்.

கருத்தியல் தளத்தில் கவனம் ஈர்த்துள்ள முத்தமிழறிஞர் பதிப்பகம், இளைஞர் அணியின் அரசியல் செயல்பாடுகளில் ஒன்றாகப் பலரையும் பேசவைத்துள்ளது.

**கருத்தியல் தளத்தில் கவனம் ஈர்த்துள்ள முத்தமிழறிஞர் பதிப்பகம், இளைஞர் அணியின் அரசியல் செயல்பாடுகளில் ஒன்றாகப் பலரையும் பேசவைத்துள்ளது.**

## பொய்ப்பெட்டி

45

**கோவி.லெனின்**

### “கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”

# ஆணவ ஆளுநரின் அடாவடிகள்...



***“முதல்வரின் ஆணவம் நல்லதல்ல” என்று ஆளுநர் ஆர்.என்.ரவி சார்பில் ராஜ்பவன் ட்வீட் செய்திருக்கிறதே?***

கண்ணாடியைப் பார்த்து ‘குரங்கு பொம்மை என்ன விலை?’ என்று கேட்ட வடிவேலுவின் நகைச்சுவைதான் ஆளுநர் மாளிகை அறிக்கையைப் படிக்கும் பொழுது நினைவுக்கு வருகிறது. பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத, பா.ஜ.க. ஆளவே முடியாத மாநிலங்களில் ஆளுநர்களை வைத்து, ஆணவப் போக்குடன் செயல்படுவதை பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

‘தாமரை மலரவே மலராது’ என்று தெரிந்துவிட்ட தமிழ்நாட்டில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட மாடல் அரசுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும் என்பதற்காகவே, ஆளுநர் ரவி நியமிக்கப்பட்டு தொடர்ச்சியாக சட்டத்தையும் மரபுகளையும் மீறுகின்ற ஆணவமும் அடாவடித்தனமும் கலந்த செயல்பாடுகளை அவர் மேற்கொண்டு வருவதை தமிழ்நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். “தமிழகம் என்றுதான் சொல்ல வேண்டும், ‘தமிழ்நாடு’ என்று சொல்லக்கூடாது என்று இந்த மாநிலத்தின் பெயர்மாற்ற வரலாற்றையே மறைப்பதற்கும் புதைப்பதற்கும் நினைத்தவர் ஆளுநர் ரவி. அதற்கான சம்மட்டி அடி பதிலடிகளை முதலமைச்சரும், தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களும், பொது மக்களும் தந்தார்கள். அதன்பிறகுதான் அவர் ‘தமிழ்நாடு’ என்று திருத்தம் செய்து கொண்டார்.

சட்டமன்றத்தில் பெரியார், அண்ணா, காமராஜர் ஆகியோரது பெயர்களைத் தவிர்த்து விட்டு, வடமாநிலத்தவர்களின் பெயர்களை இணைத்து, ஆளுநர் உரையில் மரபை மீறிப் பேசியவர் ரவி.

தேசிய கீதத்தைத் தொடக்கத்திலேயே பாட வேண்டும் என்று விதண்டாவாதம் பேசி, தமிழ்நாட்டின் சட்டமன்ற மரபை மதிக்காமல், தமிழ்த்தாய் வாழ்த்தையும் தேசிய கீதத்தையும் சேர்த்துப் புறக்கணித்து, அவமதிப்பு செய்தவர் ஆளுநர்.

தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தில் கிண்டி, ராஜ்பவனில் அன்றாடம் சோறு தின்கிற ஆளுநர் அந்தத் தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசையும் நூறாண்டுகளுக்கு மேல் பாரம்பரிய பெருமை கொண்ட தமிழ்நாடு சட்டமன்ற மாண்புகளையும், அவமானப்படுத்துவதையே தனது தொழிலாகக் கொண்டிருக்கிறார்.


தன்னுடைய தவறுகளை திசை திருப்ப முதலமைச்சரை நோக்கி ஆணவம் என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது இழிவான, மலிவான, பச்சையான அரசியலே ஆகும். இவ்வளவு பேசுகின்ற ஆளுநர், ‘தமிழர் திருநாள்’ என்று போற்றப்படும் பொங்கல் நன்னாளில் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் பொங்கல் என்கின்ற சொல்லே இடம்பெறாமல், இந்தியாவின் பிற மாநிலங்களில் அதே நாளில் கொண்டாடப்படும் வடமொழிச் சொற்களில் அமைந்த பண்டிகைகளின் பெயர்களைக் குறிப்பிட்டு விட்டு, தமிழர்களுக்கு உரிய தனித்துவமான பண்பாட்டு அடையாளமான பொங்கல் திருநாளுக்கு வாழ்த்துச் சொல்லாமல் தவிர்த்ததைப் போன்ற ஆணவம் வேறொன்று இருக்க முடியுமா? பதவி நீட்டிப்பை உரிய முறையில் பெறாமல், இன்னமும் தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தில் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்ற ஆளுநர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சரை நோக்கி ‘ஆணவம்’ என்று பேசுவதெல்லாம் அபத்தமின்றி வேறில்லை.

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

721

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131